


**21.07.2025**

## 29. ‘ஒன்றும் இல்லாமையிலும்’ அமைதி காணும் ஜீவியம்!

**ப**வுல் கூறினார் “ஒன்றும் இல்லாதவர்களென எண்ணப் பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவே எங்களை விளங்கப்பண்ணுகிறோம்” என கெம்பீரமாய் கூறினார் (2கொரிந்தியர் 6:10). யாரால் இப்படி கூற முடியும்? ஒருவனுக்கு பணம் இருந்தால் மாத்திரமே, வங்கியில் சென்று பணம் எடுத்து வர அமைதியாய் இருப்பான்! ஆனால் ‘ஒன்றுமில்லாமலே’ சகலமும் இருப்பதைப்போல் அமைதி காணும் ஓர் நிலை, ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாகும்! இதுபோன்ற ஒப்பற்ற நிலை, தேவபக்தியில் மிகுந்த பலன் கண்டவர் மாத்திரமே கெம்பீரித்திட முடியும்!

– ரத்னம்